**செ. கு. எண்: 030** **நாள்: 08.03.2020**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 8.3.2020</u>

மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், சிலைமான் கிராமத்தைச் சேர்ந்த திருமதி முனிஸ்வரி என்பவரின் கணவர் திரு.மணிமாறன் என்பவர் எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், நைனாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னதம்பி என்பவரின் மகன் திரு. கருப்பையன் என்பவர் விவசாய நிலத்தில் அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தென்காசி மாவட்டம், சிவகரி வட்டம், இராயகிரி கிராமத்தைச் சேர்ந்த திருமதி இராஜலெட்சுமி என்பவரின் கணவர் திரு. சுரேஷ் என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அணைக்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு. கருப்பன் என்பவரின் மகன் திரு. சிதம்பரம் என்பவர் தனது விவசாய நிலத்தில் பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், மாம்பலம் வட்டம், கே.கே. நகர் கன்னிகாபுரத்தைச் சேர்ந்த திரு. பழனி என்பவரின் மனைவி திருமதி சுமித்ரா என்பவர் பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வ உ சி நகர் எல்லைக்குட்பட்ட பகுதியில் மின் மாற்றியில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த திரு. கஜேந்திரன் என்பவரின் மகன் திரு. வின்சென்ட் மற்றும் திரு. ரங்கன் என்பவரின் மகன் திரு. உதயகுமார் ஆகிய இருவரும் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

தென்காசி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், மருதாத்தாள்புரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமச்சந்திரன் என்பவரின் மகள் சிறுமி அஜீதா என்பவர் பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், இக்கலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாகராஜப்பா என்பவரின் மகன் திரு. நஞ்சுண்டசாமி என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், லக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்லப்பன் என்பவரின் மகன் திரு. பிரபாகரன் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், அவிரியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மகன் திரு. அருள் என்பவர் அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்தததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

உளுந்தூர்பேட்டை வட்டம், வைப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் என்பவரின் மகன் செல்வன் லோகேஷ் என்பவர் விளையாடிக் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், முள்ளங்கினாவிளையைச் சேர்ந்த திரு. சந்திரகுமார் என்பவர் மின்மாற்றியில் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், எழும்பூர் வட்டம், சூளைமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜேம்ஸ் என்பரின் மனைவி திருமதி லீமாரோஸ் என்பவர் மின்சார வயரில் ஏற்பட்ட தீ விபத்தில், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், கொரக்கவாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. பாவாடை என்பவரின் மகன் திரு. சரவணன் என்பவர் மின் கம்பினை எதிர்பாராத விதமாக தொட்டதில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மின்சாரம் தாக்கியும், பாம்பு கடித்தும் உயிரிழந்த 15 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட துயரச் சம்பவத்தில் உயிரிழந்த **15 நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**